**2023 தங்க முனை விருது**
**தேசிய சிறுகதை, கவிதைப் போட்டி**

**பங்குபெறுவதற்கான விதிமுறைகளும் நிபந்தனைளும்**

விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிப்பதன் வழி, பின்வரும் விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு அவற்றின்படி நடக்க பங்கேற்பாளர் ஒப்புக்கொள்கிறார்:

**1. பங்குபெறுவதற்கான தகுதி**

1.1 சிங்கப்பூர்க் குடிமக்களும் நிரந்தரவாசிகளும் இப்போட்டியில் பங்கேற்கலாம். பங்குபெற வயது வரம்புகள் இல்லை.

1.2 தாங்கள் போட்டியிடும் குறிப்பிட்ட இலக்கிய வகைமையில், அதாவது சிறுகதை, கவிதை, மொழிபெயர்ப்பு போன்ற இலக்கிய வகைமையில், இதுவரை தனிப் படைப்பு எதனையும் வெளியிடாத தனிநபர்கள் மட்டுமே இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். “தனிப் படைப்பு” என்பது, வர்த்தக நோக்கத்துக்காக விற்கப்பட்ட, வெளியிடப்பட்ட அல்லது விநியோகிக்கப்பட்ட முழுநீளப் படைப்பைக் குறிக்கும். இதழ்களில் அல்லது தொகுப்புகளில் (இணையவெளியில் அல்லது அச்சுருவில்) படைப்புகளை வெளியிட்ட எழுத்தாளர்கள் தனிப்படைப்பை வெளியிட்டவர்களாகக் கருதப்படாமல், போட்டியில் கலந்துகொள்ள தகுதி பெறுவார்கள்.

1.3 தங்க முனை விருதின் முந்தைய ஆண்டுகளில் முதல் பரிசு பெற்றவர்கள், தாங்கள் பரிசுவென்ற அதே பிரிவில் மீண்டும் கலந்துகொள்ள தகுதிபெற மாட்டார்கள்.

1.4 ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட் நிறுவனம், தேசிய கலை மன்றம், சிங்கப்பூர் புத்தக மன்றம் ஆகியவற்றின் ஊழியர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

1.5 ஒவ்வொரு விண்ணப்பமும் கீழ்க்காணும் அனைத்து விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டிருந்தால், குறிப்பாக அவை எழுத்தாளரின் சொந்தப் படைப்புகளாகவும் முன்னதாக வெளியிடப்படாமலும் இருக்கும் பட்சத்தில், அதே பங்கேற்பாளர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைப் போட்டிக்கு அனுப்பலாம்.

1.6 சிறுகதை, கவிதைப் பிரிவுகளுக்கான படைப்புகளை ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் மொழிகளில் சமர்ப்பிக்கலாம்.

1.7 மொழிபெயர்ப்பு: சிறுகதை (ஆங்கிலப்) பிரிவுக்கான படைப்புகள், சீனம், மலாய் அல்லது தமிழ் மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கிலப் படைப்புகளாக மட்டுமே இருக்கவேண்டும். இந்தப் பிரிவுக்கான படைப்புகளுக்குப் பயன்படுத்தப்படும் மூலக் கதைகள்[1], சிங்கப்பூர் எழுத்தாளர்களின் பிரசுரிக்கப்பட்ட படைப்புகளாக அல்லது சுயவெளியீடுகளாக இருக்கவேண்டும்.

1.8 போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகள் ஏற்கனவே (இணையத்தில் அல்லது அச்சில்) பதிப்பிக்கப்பட்டிருக்கக்கூடாது, பதிப்பாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கக் கூடாது, அல்லது எந்தப் பொது ஊடகத்திலும் (எ.கா. இணையம், வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாட்கள், அல்லது இதழ்கள்) இடம்பெற்றிருக்கக் கூடாது. “ஏற்கனவே பதிப்பிக்கப்பட்டது” என்பது, (இணையத்தில் அல்லது அச்சில் உள்ள) இதழ்கள் அல்லது தொகுப்புகளில் இடம்பெற்றுள்ள படைப்புகளையும் குறிக்கும்.

1.9 போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் ஏற்கனவே உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் போட்டிகளில் பரிசுபெற்ற படைப்புகளாக இருந்தால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. இதற்கு முன்னர் உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் பரிசுபெற்ற படைப்புகள் தகுதிநீக்கம் செய்யப்படும்.

[1] மூலக் கதை என்பது சிங்கப்பூர்க் குடிமக்கள் அல்லது நிரந்தரவாசிகளால் சீனம், மலாய் அல்லது தமிழ் மொழிகளில் ஒன்றில் எழுதப்பட்டு, ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்படும் கதையைக் குறிக்கிறது.

1.10 இப்போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்படும்வரை, இப்போட்டிக்கு அனுப்பும் படைப்புகளை வேறு போட்டிகளுக்கோ பிரசுரத்துக்கோ ஒலி/ஒளிபரப்புக்கோ அனுப்பக்கூடாது.

1.11 கூட்டாக எழுதப்பட்ட படைப்புகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

1.12 தவறான அல்லது உண்மைக்குப் புறம்பான தகவல்களைத் தெரிந்தே அளிக்கும் பங்கேற்பாளர் போட்டியிலிருந்து தகுதிநீக்கம் செய்யப்படுவார்.

## 2. சொந்தப் படைப்புகள்

2.1 சமர்ப்பிக்கப்படும் படைப்புகள், தங்கள் சொந்தப் படைப்புகள் என்பதை உறுதிசெய்வது பங்கேற்பாளர்களின் பொறுப்பாகும். "சொந்தப் படைப்பு" என்பது, எழுத்தாளர் (அதாவது இந்த இடத்தில், பங்கேற்பாளர்) வேறு ஒருவரின் பெரும் பங்களிப்போ தாக்கமோ இல்லாமல் தாமாக சிந்தித்து உருவாக்கும் தனித்துவமான, புதிய இலக்கியப் படைப்பைக் குறிக்கும்.

2.2 பங்கேற்பாளரின் சொந்தப் படைப்பு இல்லை என்றோ (அதாவது திருடப்பட்ட அல்லது வேறு நபர் எழுதிய படைப்பு) தங்க முனை விருதின் வேறு விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மீறிவிட்டதாகவோ கண்டறியப்படும் படைப்புகள் தகுதிநீக்கம் செய்யப்படும். பங்கேற்பாளரின் விண்ணப்பப் பதிவினால் அல்லது அவர்களின் கடமை மீறல், அலட்சியம், தவறான நடத்தை ஆகியவற்றால் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஏற்படும் உரிமைகோரல்கள், நஷ்டங்கள், சேதாரங்கள், அபராதங்கள், செலவுகள், கடன்கள் ஆகியவற்றை ஏற்கும் பொறுப்பு ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட் நிறுவனத்திற்கும் சிங்கப்பூர் புத்தக மன்றத்திற்கும் இல்லை என்று பங்கேற்பாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள்.

## 3. பிரிவுகள்

3.1 இப்போட்டி பின்வரும் பிரிவுகளில் நடத்தப்படும்:

(i) ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய நான்கு மொழிகள் ஒவ்வொன்றிலும்:

a. சிறுகதை
b. கவிதை

(ii) ஆங்கிலத்தில் மட்டும் – சீனம், மலாய், அல்லது தமிழ் மூலக்கதைகளின் மொழிபெயர்ப்பு:

a. மொழிபெயர்ப்பு: சிறுகதை (ஆங்கிலம்)

3.2 பங்கேற்பாளர்கள் எந்தத் தலைப்பையும் கருப்பொருளையும் ஒட்டி எழுதலாம்.

## 4. சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டிகள்

4.1 போட்டியிடும் பிரிவைப் பொறுத்து, பங்கேற்பாளர்கள் ஒரு சிறுகதையை, ஒரு கவிதைத் திரட்டை, அல்லது ஒரு படைப்பின் மொழிபெயர்ப்பைச் சமர்ப்பிக்கலாம்.

4.2 ஒவ்வொரு பிரிவுக்குமான சொல்வரம்பு விதிமுறைகள்:

| **வகைமைப் பிரிவு** | **சொல்வரம்பு*** |
|---|---|
| சிறுகதை<br><br>மொழிபெயர்ப்பு: சிறுகதை (ஆங்கிலம்) | போட்டிக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், அதிகபட்சம் 5,000 சொற்கள் அடங்கிய ஒரு சிறுகதையை மட்டுமே கொண்டிருக்க வேண்டும். (குறைந்தபட்ச சொல் எண்ணிக்கை கிடையாது). |

| | |
|---|---|
| கவிதை | போட்டிக்கான விண்ணப்பம் சரியாக 5 கவிதைகளைக் கொண்டிருக்க வேண்டும். சொல்வரம்பு கிடையாது. |

******படைப்பின் தலைப்பும் அதில் உள்ள நிறுத்தக் குறிகளும் சொல் எண்ணிக்கையில் சேர்க்கப்பட மாட்டா. சொல்வரம்பை மீறும் பதிவுகள் தகுதி நீக்கம் செய்யப்படும்.*

4.3 அனைத்துப் படைப்புப் பிரதிகளும் பின்வரும் வடிவ சீரமைப்பு விதிமுறைகளின் படி இருக்கவேண்டும்:

| | **படைப்பின் வடிவ சீரமைப்பு** |
|---|---|
| அ. | ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ்ப் படைப்புகள் தட்டச்சு செய்யப்பட்டிருக்கவேண்டும். முடிந்தவரை இரட்டைவரி இடைவெளியும் எல்லாப் புறங்களிலும் ஓர் அங்குலம் இடமும் விடுவது சிறப்பு.<br><br>i. ஆங்கிலம், மலாய்ப் பிரதிகள் முடிந்தவரை ‘ஏரியல்’ (Arial) எழுத்துரு, அளவு 14இல் சமர்ப்பிக்கப்படவேண்டும்.<br>ii. சீனப் பிரதிகள் முடிந்தவரை ‘சிம் சன்’ (Sim Sun) எழுத்துரு, அளவு 14இல் சமர்ப்பிக்கப்படவேண்டும்.<br>iii. தமிழ்ப் பிரதிகள் யூனிக்கோட் (Unicode) எழுத்துருவில், முடிந்தவரை ‘லதா’-வில், எழுத்துரு அளவு 14இல் தட்டச்சு செய்யப்பட்டிருக்க வேண்டும். |
| ஆ. | படைப்பின் தலைப்பைத் தவிர, பெயர், முகவரி அல்லது வேறு அடையாளக் குறியீடுகள் ஏதும் பிரதியில் **இருக்கக்கூடாது.** |
| இ. | மொழிபெயர்ப்பு: சிறுகதை (ஆங்கிலப்) பிரிவுக்கு, சிறுகதை மற்றும் புத்தகத்தின் தலைப்பும் (சீனம், மலாய், அல்லது தமிழில்), ISBN எண் இருந்தால் அதுவும் சேர்க்கப்படவேண்டும் |
| ஈ. | சிறுகதைப் பிரதிகளின் இறுதியில் சொல் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். |
| உ. | ஒவ்வொரு பக்கத்திலும் பக்க எண்ணைக் குறிப்பிடவேண்டும். |

4.4 மொழிபெயர்ப்பு: சிறுகதை (ஆங்கிலப்) பிரிவுக்கு, பங்கேற்பாளர் தங்க முனை விருது போட்டிக்காக மூலக்கதையைப் பயன்படுத்த பதிப்புரிமையாளரிடம் மற்றும்/அல்லது வெளியீட்டாளரிடம் எழுத்துபூர்வ அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட் நிறுவனம் அல்லது சிங்கப்பூர் புத்தக மன்றம் கேட்கும்போது, பங்கேற்பாளர் எழுத்துபூர்வ அனுமதியைக் காட்டவேண்டும்.

## 5. விண்ணப்பிக்கும் முறை

5.1 ஒவ்வொரு விண்ணப்பத்துக்கான கட்டணமும், படைப்புகளைச் சமர்ப்பிப்பதற்கான அதிகாரத்துவ இணையவாசலில் படைப்பைச் சமர்ப்பிக்கும்போது செலுத்தப்பட வேண்டும். அதிகாரத்துவ இணையவாசலில் மின்னிலக்க வடிவில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை மட்டுமே தங்க முனை விருது போட்டி ஏற்றுக்கொள்ளும். நேரில் வந்து விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவோ மேல்விவரம் கோரவோ முடியாது.

5.2 இணைவாசலில் விண்ணப்பிக்கும் முன்னர், அன்புகூர்ந்து பின்வருபவற்றைத் தயாராய் வைத்திருக்கவும்:

i. நூறு ஆங்கிலச் சொற்களில் பங்கேற்பாளரின் சுயவிவரக் குறிப்பு
ii. ஐம்பது சொற்களில் உங்கள் படைப்பைப் பற்றிய விளக்கம்
iii. பிடிஎஃப் வடிவிலான படைப்பின் பிரதி (அதிகபட்ச அளவு 5 MB)
iv. பேபெல் (PayPal) அல்லது கடன் அட்டை வழியாகச் செலுத்தும் கட்டணங்களுக்கான மின்வங்கி/மின்கட்டணச் செயலிகள்

நீங்கள் மொழிபெயர்ப்பு: சிறுகதை (ஆங்கிலப்) பிரிவுக்கு ஒரு படைப்பைச் சமர்ப்பிப்பதாக இருந்தால், கூடுதலாகப் பின்வரும் குறிப்பையும் தயாராக வைத்திருக்கவும்:

v. ஐம்பது சொற்களில் மூலக்கதை எழுத்தாளரின் சுயவிவரக் குறிப்பு

5.3 இணையவாசல் வழி விண்ணப்பிப்பதில் சிக்கல்களை எதிர்நோக்குபவர்கள், கீழ்காணும் பத்தி எண் 10.3இல் இடம்பெற்றுள்ள தொடர்புவழிகளில் எங்களை தொலைபேசியில் அழைக்கலாம் அல்லது மின்னஞ்சல் அனுப்பலாம்.

5.4 போட்டிக்கான ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் $16 பதிவுக்கட்டணம் செலுத்தவேண்டும். பதிவுக்கட்டணத் தொகையைத் திரும்பப் பெறவோ வேறு ஒருவருக்கு மாற்றிவிடவோ முடியாது.

5.5 பதிவுக்கட்டணத்தை பேபெல் (PayPal) அல்லது கடன் அட்டை மூலம் செலுத்தலாம்.

5.6 ஒரே எழுத்தாளர், அதே பிரிவில் அல்லது வெவ்வேறு பிரிவுகளில், போட்டிக்குப் பல படைப்புகளை அனுப்பினால், அவைத் தனித்தனி விண்ணப்பங்களாகக் கருதப்பட்டு, ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் தனித்தனியே பதிவுக்கட்டணம் வசூலிக்கப்படும்.

5.7 கட்டணத்தைச் செலுத்திய பின்னர், போட்டியிலிருந்து விலகவோ, பிரதியை மீட்டுக்கொள்ளவோ, விண்ணபத்தை வேறுநபருக்கு மாற்றிவிடவோ அனுமதி இல்லை.

5.8 தாமதமாக, படிக்க இயலாத வகையில், அல்லது முழுமைபெறாமல் சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் போட்டிக்கு எடுத்துக்கொள்ளப்படாததோடு, நிராகரிக்கப்பட்ட பிரதிகள் குறித்த மேல்முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

5.9 மேற்காணும் பத்திகள் 4, 5 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டிகளுக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு சமர்ப்பிக்கப்படாத படைப்புகள் தகுதிநீக்கம் செய்யப்படலாம்.

## 6. மதிப்பாய்வு

6.1 ஒவ்வொரு வகைமைப் பிரிவிலும் மொழிப் பிரிவிலும் இரண்டு சிங்கப்பூரர்களையும் ஓர் அனைத்துலக நடுவரையும் கொண்ட நடுவர்க் குழு படைப்புகளை மதிப்பாய்வு செய்யும்.

6.2 போட்டியில் கலந்துகொள்ளும் அனைவரது தனிப்பட்ட விவரங்கள் யாவும் இரகசியமாக வைக்கப்பட்டு, போட்டியின்போது ஆர்ட்ஸ் ஹவுஸ், சிங்கப்பூர் புத்தக மன்றம் ஆகியவற்றுக்கு மட்டுமே தெரிந்திருக்கும். ஆனால், போட்டி முடிந்தவுடன் பங்கேற்பாளர்களின் பெயர்களும் தொடர்புவிவரங்களும் நடுவர்களுக்குத் தெரிவிக்கப்படலாம்.

6.3 சூழ்நிலைக்கு ஏற்ப, பரிசுகளை வழங்கலாமா அல்லது வேண்டாமா என்று முடிவெடுக்கும் உரிமை நடுவர்களுக்கு உள்ளது.

6.4 நடுவர்க்குழுவின் முடிவே இறுதியானது. அதுபற்றிய விவாதமோ கடிதப்போக்குவரத்தோ பரிசீலிக்கப்பட மாட்டா.

## 7. விருதுகள்

7.1 நான்கு மொழிகளிலும் (ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ்) உள்ள சிறுகதைப் பிரிவு, கவிதைப் பிரிவு ஒவ்வொன்றுக்கும், 'மொழிபெயர்ப்பு: சிறுகதை' பிரிவில் ஆங்கிலத்திற்கு மட்டும் பின்வரும் பரிசுகள் வழங்கப்படும்.

முதல் பரிசு: $6,000 ரொக்கம், சான்றிதழ், பரிசுக்கோப்பை, வழிகாட்டல் திட்டம்
இரண்டாம் பரிசு: $4,000 ரொக்கம், சான்றிதழ், வழிகாட்டல் திட்டம்
மூன்றாம் பரிசு: $2,000 ரொக்கம், சான்றிதழ், வழிகாட்டல் திட்டம்

7.2 ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வொரு வகைமைப் பிரிவிலும் அதிகபட்சம் மூவருக்கு ஊக்கப்பரிசாக

ஆளுக்கு $500 ரொக்கம் வழங்கப்படலாம்.

7.3 ஒரே பரிசுக்கு இருவர் தகுதிபெற்றால், அந்தப் பரிசுப்பணமும் தகுதிவரிசையில் அதற்கு அடுத்த நிலையில் உள்ள பரிசுப்பணமும் சேர்க்கப்பட்டு, அவர்களுக்குச் சமமாகப் பிரித்து வழங்கப்படும். மூன்றாம் பரிசுக்கு இருவர் தகுதிபெற்றால், இருவருமே அறிவிக்கப்பட்ட பரிசைப் பெறுவார்கள்.

7.4 மேற்குறிப்பிடப்பட்ட எந்தப் பரிசும் வழங்கப்படாது என்று முடிவெடுக்கப்பட்டால், அவற்றுக்குப் பதிலாக $500 மதிப்புள்ள தகுதி விருது வழங்கப்படலாம்.

**8. முடிவுகளும் வெற்றியாளர்களுக்கான விருது நிகழ்ச்சியும்**

8.1 விருது நிகழ்ச்சி 2023 டிசம்பர் மாதம் நடைபெறும்.

8.2 பரிசுபெறும் அனைவரும் விருது வழங்கும் நிகழ்ச்சியில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். நிகழ்ச்சி தேதி நெருங்கும்போது அதுபற்றிய விவரங்கள் பரிசுபெறுவோருக்குத் தெரிவிக்கப்படும்.

8.3 நிகழ்ச்சியில் கலந்துகொள்ளாத வெற்றியாளர்கள், ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட் நிறுவனம் அல்லது சிங்கப்பூர் புத்தக மன்றத்திடம் முன் அனுமதி பெறாதிருந்தால், அல்லது தங்கள் சார்பில் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள பிரதிநிதியை நியமிக்காதிருந்தால், தங்கள் பரிசைத் துறந்துவிட்டதாகக் கருதப்படும்.

8.4 பரிசுபெறுபவர்களின் பெயர் பட்டியல், விருது நிகழ்ச்சிக்குப் பிறகு ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட் நிறுவனம், சிங்கப்பூர் புத்தக மன்ற இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

8.5 கருத்துவேறு ஏதேனும் ஏற்பட்டால், ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிடட்டின் முடிவு அல்லது அதன் சார்பில் செயல்படும் நடுவர்க் குழுவின் தீர்ப்பே இறுதியானது என்பதுடன் அது பற்றிய விவாதமோ கடிதப் போக்குவரத்தோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**9. அறிவுசார் சொத்துரிமை**

9.1 படைப்பை முதலில் பதிப்பிக்கும் உரிமை உட்பட எல்லா பதிப்புரிமைகளும், வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், வெற்றிபெறும் படைப்பை எழுதியவரின் வசம் இருக்கும். "முதல் பதிப்பு" என்பது, மின்னியல் வடிவில் அல்லது அச்சு வடிவிலான எந்த நூல், பருவவெளியீடு, அல்லது பிரசுரத்தின் முதல் பதிப்பு அல்லது பிரதியின் வெளியீட்டையும் விற்பனையையும் குறிக்கும்.

9.2 இருப்பினும், வெற்றிபெறும் படைப்புகளை முதலில் பதிப்பிக்கும் உரிமையை எழுத்தாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முதலுரிமை ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிடட்டுக்கு உள்ளது. வெற்றிபெறும் படைப்பை அச்சில் அல்லது வேறு வடிவில் (அ) பிரசுரிக்க அல்லது (ஆ) மறுஉருவாக்கம் செய்ய யாரேனும் முன்வந்தால், வெற்றியாளர்கள் அதுபற்றி ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிடட்டுக்கு உடனே தெரிவிக்க வேண்டும். முதல் பதிப்புரிமையை எழுத்தாளரிடமிருந்து பெற ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிடட் முடிவுசெய்தால், பரிசுபெற்ற படைப்புகளை வெளியிட நற்பெயர்பெற்ற பதிப்பாளர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை ஆர்ட்ஸ் ஹவுஸ் நிறுவனத்துக்கு உண்டு.

9.3 இருந்தபோதும், ஆர்ட்ஸ் ஹவுஸ் நிருவனம் விரும்பினால், உரிமக்கட்டணம் செலுத்தாமல் அதன் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் (www.artshouselimited.sg/gpa), வெற்றிபெறும் படைப்புகளின் பகுதிகளை ஆவணப்படுத்தவும் வெளியிடவும் அதற்கு உரிமையுண்டு.

9.4 பரிசுபெற்ற படைப்பு வெளியிடப்படும் போதெல்லாம், வெற்றியாளர்கள் பின்வரும் வரியில் உள்ளவாறு ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிடட்டுக்கும் தங்க முனை விருதுக்கும் நன்றி தெரிவிப்பது அவசியமாகும். “[எழுத்தாளரின் பெயர்]-இன் [கவிதை/சிறுகதையின் தலைப்பு] ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட் நிறுவனம் சிங்கப்பூர் புத்தக மன்றத்துடன் கூட்டிணைந்து ஏற்பாடு செய்த தங்க முனை விருது 2023 போட்டியில் முதல்/இரண்டாம்/மூன்றாம் பரிசைப் பெற்றது." என்னும் வரி ஒவ்வொரு பிரதியிலும் இடம்பெற்றிருக்க வேண்டும். இந்த நன்றித் தெரிவிப்பு நூலின்

பதிப்புரிமை அறிவிப்புப் பக்கத்தில், மற்ற நன்றி தெரிவிப்புகளும் ISBN எண்களும் இருக்கும் இடத்தில் இடம்பெற வேண்டும்.

9.5 ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட் அல்லது சிங்கப்பூர் புத்தக மன்றம் அழைப்பு விடுத்தால், எல்லா பிரிவுகளிலும் பரிசுபெற்றவர்களும் கூடுதல் தொகைபெறாமல், பரிசுபெற்ற தங்கள் படைப்புகளைப் பொதுமேடையில், தொலைக்காட்சியில், வானொலியில் வாசிக்கவும் போட்டி தொடர்பான நேர்காணல்களில் கலந்துகொள்ளவும் தேவையிருக்கும்.

9.6 ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட் நிறுவனமும் சிங்கப்பூர் புத்தக மன்றமும், பங்கேற்பாளர்களுக்குத் தொகை ஏதும் அளிக்காமல், போட்டித் தொடர்பான நடவடிக்கைகளை முழுமையாக அல்லது குறிப்பிட்ட பகுதிகளை ஒலி/ஒளிபரப்புக்காகவும் விளம்பரத்துக்காகவும் பதிவுசெய்யும் உரிமையைப் பெற்றிருக்கும். அப்பதிவுகளுக்கான எல்லா விதமான உரிமைகளும் ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிட்டட், சிங்கப்பூர் புத்தக மன்றம் ஆகியவற்றின் வசமிருக்கும்.

## 10. பொது விதிகள்

10.1 போட்டியின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் திருத்தியமைக்கும் உரிமையை ஆர்ட்ஸ் ஹவுஸ் லிமிடட் பெற்றுள்ளது.

10.2 கருத்துவேறுபாடுகள் ஏற்படும் பட்சத்தில், இந்த விதிமுறைகளும் நிபந்தனைகளும் சிங்கப்பூர்ச் சட்டங்களின்படி வழிடத்தப்படும்.

**2023-இல் முக்கிய தேதிகள்**

| **தேதி** | **நிகழ்வு** |
|---|---|
| 25 ஏப்ரல் 2023 | இணையவாசலில் விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கால அவகாசம் தொடங்கும் |
| 23 ஜூன் 2023, மாலை 6 மணி (சிங்கப்பூர் நேரம்) | இணையவாசலில் விண்ணப்பங்களை அனுப்புவதற்கான கால அவகாசம் முடிவுறும் |
| டிசம்பர் 2023 | வெற்றியாளர்களுக்குப் பரிசுகளை வழங்கும் விருது நிகழ்ச்சி |

10.3 கேள்விகள் இருந்தால், அன்புகூர்ந்து பின்வரும் வழிகளில் எங்களைத் தொடர்புகொள்ளவும்:

**மின்னஞ்சல்:** gpa@bookcouncil.sg
**தொலைபேசி:** 6342 5119
செயல்படும் நேரம்: காலை 10.00 மணி – மாலை 6.00 மணி (திங்கள் முதல் வெள்ளி வரை, பொது விடுமுறைகள் தவிர)